# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,516 — 1958 සැප්තැම්බර් 5 වැනි සිකුරාද —5.9.1958

11 516 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II—சட்ட சம்பந்தமானது

## சுப்பிறீங்கோட் கிறிமினெல் வழக்கு விசாரணைகள் பற்றிய அறிவித்தல்கள்

### பிரசித்த பத்திரம்

*இலங்கைத் தீவித்தின் கௌரவ உயர்தர நீதிமன்றம் தென் மாகாணத்துக்கென நடாத்தும் கிறிமினெல் வழக்கு விசாரணை காலியில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் 1958 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் திகதி காலை 11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று, குறித்த உயர்தர நீதிமன்றம் எனக்குப் பிறப்பித்துள்ள கட்டளையின் பிரகாரம் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.*

*மேலும் குறித்த வழக்கு விசாரணையிற் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் மேற்சொல்லப்பட்ட நேரத்திலும், இடத்திலும் சமுகமாயிருந்து, அனுமதி கேட்டுப்பெற்றன்றி அவ்விடத்தை விட்டு நீங்காதிருக்கக்கடவர்.*

*சி. ஜே. சேரசிங்க,*
*தெ. மா. பிசுக்கால்.*

*பிசுக்கால் கந்தோர்,*
*காலி, 1958 ஸ்ரீ ஆவணி மீ 25 ந் உ*

### பிரசித்த பத்திரம்

*இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : யாழ்ப்பாண நகரசங்க மண்டபத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் யாழ்ப்பாணம், மன்னார் வவுனியா-முல்லைத்தீவு டிஸ்திறிக்குகளைச் சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1958 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.*

*இங்ஙனம்,*
*ம. ஸ்ரீகாந்தா,*
*வட மாகாண பிஸ்கால்.*

*பிஸ்கால் கந்தோர்,*
*1958 ம் ஸ்ரீ ஆவணிமீ 26 ந் உ.*


### விளம்பரம்

**1958 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாதலால், 1958 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மாதத்தின் நான்காம் வாரத்திற்குரிய இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1958 ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மாதம் 25 ந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படும். அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1958 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மாதம் 22 ந் திகதி திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.**

**பேர்னர்ட் த சில்வா,**
**அரசாங்க அச்சகத் தலைவர்.**

**அரசாங்க அச்சகம்,**
**கொழும்பு,**
**1958 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மாதம் 2 ந் திகதி.**

1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) "

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **" நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறு இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | | ரூ. | ச. | | |
|---|---|---|---|---|---|
| ஒரு வருட சந்தா | .. | 15 | 0 | .. | ஒவ்வொரு பகுதிக்கும் |
| | | 7 | 0 | .. | ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி | .. | 0 | 25 | | |
| | | 0 | 31 | .. | தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | .. | 0 | 10 | | |
| | | 0 | 14 | .. | தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.